முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

வா.சா.1 தேதி.04.10.2023

| OS.No. | 45/2020 | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

நான் ஏற்கனவே வா.சா.ஆ.1 முதல் 13 ஆவணங்கள் குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளேன். எனது தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்வதால் இன்று மீண்டும் சாட்சியம் அளிக்கிறேன். எனது தரப்பு ஆவணங்களாக 1ம் வாதி பெயரில் உள்ள வாடகை ரசீதுகள் 14 எண்ணிக்கைகள் வா.சா.ஆ.14 ஆகவும், 5 முதல் 7 வாதிகள் பெயரிடப்பட்ட வாடகை ரசீதுகள் (10 எண்ணிக்கைகள்) வா.சா.ஆ.15 ஆகவும், எனது பெயரில் செலுத்தப்பட்ட வாடகை ரசீதுகள் (8 எண்ணிக்கைகள்) வா.சா.ஆ.16 ஆகவும், பிரதிவாதியால் வாதிகளுக்கு அனுப்பப்பட்ட கேட்பு அறிவிப்புகள் வா.சா.ஆ.17, 18,19 மற்றும் 20 ஆகவும், வாதிகளால் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ஒப்புதல் அட்டையுடன் வா.சா.ஆ.21 ஆகவும், பிரதிவாதி கொடுத்த இறுதி அறிவிப்புகள் வா.சா.ஆ.22, 23 ஆகவும், பிரதிவாதி 1ம் வாதிக்கு கொடுத்த அறிவிப்பு வா.சா.ஆ.24 ஆகவும், வருவாய் துறையினரால் வழங்கப்பட்ட டி பிளான் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.25 ஆகவும், வழக்கறிஞர் ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட ஆணயர் அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.1, 2 ஆகவும் குறியீடு செய்கிறேன்.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.